பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

04 10 2025 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகளை தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழு இன்று ஆய்வு செய்யவுள்ளது.

2. நாட்டில் குற்றம் செய்துவிட்டு, வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்கள் விசாரணையை எதிர்கொள்வார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் சிங்கப்பூரில் அந்நாட்டு பிரதமர் திரு. Lawrence Wong-ஐ சந்தித்து வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தினார்.

4. காஸாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான தமது திட்டத்திற்கு ஹமாஸ் அமைப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளதாக, அமெரிக்க அதிபர் திரு. டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா நேற்று 2 தங்கம் மற்றும் 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகளை தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழு இன்று ஆய்வு செய்கிறது.

இதற்காக, ஆணையர்கள் டாக்டர் சுக்பீர்சிங் சாந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோருடன் தலைமை தேர்தல் ஆணையர் பாட்னா சென்றுள்ளார்.

இன்றும், நாளையும் அக்குழுவினர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து, அவர்களின் யோசனைகளையும் கேட்டறியவுள்ளனர்.

தேர்தலின்போது சட்டம் ஒழுங்கை முறையாக பராமரிப்பது தொடர்பாக, அரசு அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டத்திலும் தேர்தல் ஆணையர்கள் உரையாற்றவுள்ளனர்.

**<<<<<>>>>>**

நாட்டில் குற்றம் செய்துவிட்டு, வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்கள் விசாரணையை எதிர்கொள்வார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம், குருக்ஷேத்ராவில் நேற்று, புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான மாநில அளவிலான கண்காட்சியை அவர் திறந்து வைத்து பேசினார்.

இந்த புதிய சட்டங்கள் வாயிலாக, தண்டனைக்குப் பதிலாக நீதி உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தின் கீழ் ஏழைகள் கூட எளிதாக நீதியை பெறமுடியும் என்றும், அவர்கள் தங்களது சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, குருக்ஷேத்ராவில் சுமார் 825 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

5 செவிலியர் கல்லூரிகளை ஏற்படுத்துதல், 84 காவலர் குடியிருப்புகளை கட்டுதல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை அமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. நயாப்சிங் மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

**<<<<<>>>>>**

ஹிமாச்சலப் பிரதேசத்தில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளில் ஏராளமான புதிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

நேற்று அந்த மருத்துவமனையின் 3-வது ஆண்டு விழாவில் பேசிய அவர், எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் PET – CT Scan வசதி மற்றும் புற்றுநோய்க்கான சிகிச்சை, கணைய மாற்று அறுவை சிகிச்சைக்கான வசதிகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவமனையில் புதிதாக 127 பேர் பல்வேறு பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவமனையுடன் கூடிய கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்காக விடுதி மற்றும் ஊழியர் குடியிருப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் தற்போது 808 மருத்துவக் கல்லூரிகள் உள்ளதாகவும், அதில் 1 லட்சத்து 25 ஆயிரம் MBBS இடங்கள் உள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் நேற்று சிங்கப்பூரில் அந்நாட்டு பிரதமர் திரு. Lawrence Wong-ஐ சந்தித்து வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தினார்.

சிங்கப்பூரில் 3 நாட்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர். புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் டிஜிட்டல் இணைப்புகளை மேம்படுத்துதல், நிலையான வளர்ச்சியில் புதிய வாய்ப்புகளை உருவாக்கதல் குறித்து அவருடன் ஆலோசனை நடத்தினார்.

சிங்கப்பூர் துணைப் பிரதமரும். வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சருமான திரு. Gan Kim Yong மற்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோரையும் திரு. பியூஷ் கோயல் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவிற்கும் – சிங்கப்பூருக்கும் இடையிலான தொழில் மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்து அவர்களிடம் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

**<<<<<>>>>>**

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் புதிதாக விரோதப் போக்கை கையாண்டால், கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ராணுவ தலைமைத் தளபதி Upendra Dwivedi எச்சரித்துள்ளார்.

ராஜஸ்தானில் ஸ்ரீகங்கா நகர் அருகேயுள்ள எல்லை கிராமத்தில் ராணுவ முகாமில் நேற்று வீரர்களிடையே உரையாற்றும் போது இதனை அவர் தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் 9 இடங்கள் அழிக்கப்பட்டதாகவும் Upendra Dwivedi கூறினார்.

**<<<<<>>>>>**

காஸாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான தமது திட்டத்திற்கு ஹமாஸ் அமைப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளதாக, அமெரிக்க அதிபர் திரு. டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

தங்களது பிடியில் மீதமுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் அமைப்பினர் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான தமது 20 அம்ச அமைதி திட்டத்தை ஏற்றுக் கொள்ள, நாளை வரை திரு. ட்ரம்ப் கெடு விதித்திருந்த நிலையில், இந்த அறிவிப்பை ஹமாஸ் வெளியிட்டுள்ளது.

அதே நேரத்தில், காஸாவின் எதிர்காலம் மற்றும் பாலஸ்தீனர்களின் உரிமைகள் தொடர்பாக, தொடந்து பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஹமாஸ் கூறியுள்ளது.

அமைதி திட்டத்திற்கு ஹமாஸ் அமைப்பு முன்வந்துள்ளதால், காஸா-மீது தாக்குதல் நடத்துவதை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று திரு. டோனல்டு ட்ரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.

**<<<<<>>>>>**

இந்தியாவின் மேற்கு பகுதிகளில் குடியேறியுள்ள சிந்தி மக்களின் மரபணு, பாகிஸ்தானில் உள்ள சிந்தி மக்களிடமிருந்து மிகவும் வேறுபட்டது மற்றும் தனித்துவமானது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஹைதராபாததை தலைமையிடமாக கொண்ட செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

இந்தியாவில் வாழும் சிந்தி இனத்தவரின் மக்கள்தொகை குறித்து, இந்த ஆய்வு மையத்தைச் சேர்ந்த டாக்டர் குமாரசாமி தங்கராஜ் தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வை நடத்தியுள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகள் சமீபத்திய மனித மரபியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் 6 லட்சம் DNA குறிப்புகளை பயன்படுத்தி, சிந்தி மக்களின் மரபணு தரவுகளை உருவாக்கியுள்ளனர்.

**<<<<<>>>>>**

தேர்வுகளை வெளிப்படையாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்வுகளில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்கள், வினா மற்றும் விடைத்தாள்களை சரிபார்த்துக் கொள்ள முடியும் என்றும், இதனால், நாடுமுழுவதும் லட்சக்கணக்கான இளைஞர்கள் பயனடைவார்கள் என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

சரியான பதில்களுக்கு மதிப்பெண் மறுக்கப்பட்டிருந்தால், அதுகுறித்து ஆதாரத்துடன் கேள்வி எழுப்ப முடியும் என்றும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள்களை சரிபார்ப்பதற்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாகவும், ஆதார் அடிப்படையிலான விண்ணப்பம் சரிபார்ப்பு உள்ளிட்டவை ஆணையத்தின் சில முக்கிய சீர்திருத்தங்கள் என்றும் பணியாளர் தேர்வாணையம் கூறியுள்ளது.

**<<<<<>>>>>**

மணிப்பூர் மாநிலத்தில், ஐக்கிய குக்கி தேசிய ராணுவம் என்று அழைக்கப்படும் தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்த 5 பேரை அஸாம் ஆயுதப்படையினர் கைது செய்துள்ளனர்.

சவ்ராசந்தர்பூர் மாவட்டத்தில் சாங்கோட் கிராமத்தில் இவர்களின் நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலை அடுத்து. அங்கு விரைந்த பாதுகாப்பு படையினர், அவர்களை கைது செய்ததோடு. அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் பறிமுதல் செய்தனர்.

அவர்கள் மீது சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டம் மற்றும் ஆயுதச் சட்டத்தின் கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

அரபிக்கடலில் உருவாகியுள்ள Shakti புயல் காரணமாக மஹாராஷ்ட்ராவில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மும்பை, தானே, பால்கர், ராய்கட், ரத்னகிரி, சிந்து துர்க் ஆகிய மாவட்டங்களில் மணிக்கு 45 முதல் 55 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் வலுவடைவதைப் பொறுத்து காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என்றும், அரபிக்கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்றும், இதன் காரணமாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில். மஹாராஷ்ட்ராவின் கிழக்கு விதர்பா, மராத்வாடா உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழை பெய்யும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

சக்தி புயலை எதிர்கொள்ள மஹாராஷ்ட்ரா மாநில அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகங்கள் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<<>>>>>**

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா நேற்று 2 தங்கம் மற்றும் 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 100 மீட்டர் ஓட்டத்தில் சிம்ரன் சர்மாவும், உயரம் தாண்டுதலில் Nishad Kumar-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் Preethi Pal-ம், ஆடவர் வட்டு எறிதலில் Pardeep Kumar-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்

இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது.

<<<<<END>>>>>